# நமது ஈழநாடு

www.namathueelanadu.com

குரல் 06 மலர் 62 ஆகஸ்ட் 2025 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com இணையம்: www.namathueelanadu.com




Simply Scan the QR code Your Phone Camera

Download the NamathuEelanadu app

*போராட்ட வடிவங்கள் மாறலாம்: ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை.*

- தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன்





# பாதிக்கப்பட்டவர்களின் வலிகளை புறக்கணித்துள்ள ஐ.நா.அறிக்கை

*தந்திரீகன்*

இலங்கையின் அண்மைய அரசியல் மாற்றங்கள், குறிப்பாக புதிய அரசாங்கத்தின் உருவாக்கம், உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும் புதியதொரு எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

வழக்கமான உள்நாட்டில் ஏற்படுகின்ற அரசியல் மாற்றங்களும், புதிய தலைமைத்துவங்களும் போரின் பின்னரான சூழலில் இத்தகைய பலத்த எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்துவது இயல்பானது.

அவ்வாறான நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் வெளியிட்டுள்ள இலங்கை தொடர்பான முற்கூட்டிய வரைவு அறிக்கை, புதிய அரசாங்கத்திற்கு உண்மை, நீதி மற்றும் நிலையான சமாதானத்தை நிறுவுவதற்கான ஒரு ‘வரலாற்று வாய்ப்பு’ இருப்பதாகக் குறிப்பிட்டிருப்பது, இந்த எதிர்பார்ப்பின் உச்சக்கட்ட வெளிப்பாடாகும்.

ஆனால், கடந்தகாலங்களில் இதே போன்ற வாய்ப்புகளும், வாக்குறுதிகளும் அந்தந்த அரசாங்கங்களால் எவ்வாறு கைவிடப்பட்டன என்ற கசப்பான அனுபவம், குறித்த அறிக்கை அரசாங்கத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையை பெரிதும் கேள்விக்குள்ளாக்குகிறது.

விசேடமாக, மைத்திரிரணில் கூட்டாட்சி அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கே இணை அனுசரணை வழங்கியதன் பின்னர் எவ்வாறு விடயங்களை கிடப்பில் போட்டது என்பதற்கு ஆகச்பிந்தைய உதாரணமாகும்.

அதுமட்டுமன்றி, தற்போதைய அநுர அரசாங்கமும் பதவிக்கு வந்து சில மாதங்கள்ளேயே ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் ஐ.நாவின் தீர்மானங்களை நிராகரிப்பதாகவும், உள்நாட்டு தேசிய பொறிமுறைகளை மட்டுமே முன்னெடுப்பதாகவும் அறிவித்துள்ளது.

இவ்வாறாக பொறுப்புக்கூறல் விடயத்தில் அரசாங்கம் காட்டும் பின்வாங்கல், ஏமாற்று நடவடிக்கைகள், மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்களின் உணர்வுகளைப் புறக்கணித்தல் ஆகியவை இந்த அறிக்கையின் மையக்கருத்தை சிதைப்பதாகவே அமைந்துள்ளன.

புதிய அரசாங்கம், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில், பல்வேறு சமூக, அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களை முன்னெடுப்பதாக அளித்த வாக்குறுதிகள் இந்த அறிக்கையில் நம்பிக்கையுடன் குறிப்பிடப்பட்டுள்ளன.

குறிப்பாக, பல தசாப்த கால இனவாத அரசியலின் விளைவுகளை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டமை, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதாக வாக்குறுதி அளித்தமை, சுயாதீன வழக்குத்தொடுநர் அலுவலகத்தை நிறுவுவதாகக் குறிப்பிட்டமை போன்றவை அறிக்கையின் நம்பிக்கைக்கு அடிப்படையாக அமைந்துள்ளன.

ஆனால், யதார்த்தத்தில் இந்த வாக்குறுதிகளுக்கும், அரசாங்கத்தின் நடைமுறைச் செயற்பாடுகளுக்கும் இடையே பாரியதொரு இடைவெளி காணப்படுகிறது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக நீக்குவதற்கு பதிலாக, அதனை ஆராய்வதற்கு ஒரு குழுவை நியமித்து, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறித்து கருத்துக்களை சமர்ப்பிப்பதற்கு பொதுமக்களுக்கு வெறும் இரண்டு வார கால அவகாசத்தை வழங்குவதன் மூலம், அரசாங்கம் தனது வாக்குறுதியிலிருந்து பின்வாங்குவதைக் வெளிப்படையாகவே காண்பித்துள்ளது.

அதுமட்டுமன்றி, இச்சட்டம் இன்னும் முழுமையாக நடைமுறையில் உள்ள நிலையில், போராட்டங்களில் பங்கேற்றவர்கள் மற்றும் நினைவேந்தல்களை ஒழுங்கு செய்தவர்கள் போன்றோர் இச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்படுவதும் தொடர்கிறது.



படம் : இணையம்

ஒரு புறம் உலக அரங்கில் தம்மை சீர்திருத்தவாதிகளாக காட்டிக் கொண்டு, மறுபுறம் உள்நாட்டில் அடக்குமுறைச் சட்டங்களைப் பயன்படுத்தி மக்களை ஒடுக்கும் செயற்பாடுகளுக்கு அங்கீகாரம் அளிப்பதானது அரசாங்கத்தின் இரட்டை வேடத்தைக் காட்டுகிறது. அவ்விதமான நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் அலுவலக அறிக்கை அவ்விடயங்களை கவனத்தில் கொள்ளாமை ஏன் என்ற கேள்வியை உருவாக்குகின்றது.

இந்த அறிக்கையின் ஒரு முக்கியமான குறைபாடு என்னவென்றால், அது கடந்தகால பொறுப்புக்கூறல் மறுதலிப்புகளைப் போதிய அளவு கருத்தில் கொள்ளத் தவறியுள்ளமையாகும்.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து, ஒவ்வொரு சிங்களத் தலைமைகளுக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும், பொறுப்புக்கூறலை நிலைநாட்டுவதற்கும் பல வாய்ப்புகள் கிடைத்தன. ஆனால், அவர்கள் அந்த வாய்ப்புகளை ஒருபோதும் பயன்படுத்திக் கொண்டதில்லை.

மாறாக, இனவாத அரசியலை முன்னெடுத்து, அதிகாரத்தை நிலைநிறுத்தவே முயற்சித்தனர். மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க போன்ற தலைமைகள், வெளிநாட்டு நீதிபதிகள் அடங்கிய கலப்புப் பொறிமுறையை உருவாக்குவதாக ஜெனிவாவில் இணக்கம் தெரிவித்தபோதும், அதனை நடைமுறைப்படுத்தாமல் ஏமாற்றினர்.

குற்றம் இழைத்தவர்களைப் பாதுகாப்பதிலும், நீதியைக் கோரியவர்களை அடக்குவதிலுமே அவர்கள் கவனம் செலுத்தினர். இப்போது அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் அதேபோன்ற ‘வரலாற்று வாய்ப்பு’ கிடைத்திருப்பதாகக் கூறுவது, பாதிக்கப்பட்டவர்களின் நீண்டகால வலிகளையும், வரலாற்றுப் பாடங்களையும் ஐ.நா. முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதை வெளிப்படுத்துகிறது.

அறிக்கையில் காணப்படும் மற்றொரு பெரிய குறைபாடு, அது பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளைப் புறக்கணித்து, உள்நாட்டுப் பொறிமுறைகளை உருவாக்குவதற்கு அதிக அழுத்தம் கொடுப்பதாகும்.

பாதிக்கப்பட்ட மக்கள் சர்வதேசப் பொறிமுறை ஒன்றே தங்களுக்கு நீதியைப் பெற்றுத்தரும் எனத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர். ஆனால், ஐ.நா. அறிக்கை மீண்டும் உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றை உருவாக்குமாறு வலியுறுத்துவது அதன் தோல்வியையே காட்டுகிறது.

கடந்த காலங்களில் உள்நாட்டுப் பொறிமுறைகள் நீதி வழங்குவதில் தோல்வியடைந்துள்ளன என்பதை ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வேல்கர் டேர்க் அறிந்திருந்தும், அதே பரிந்துரையை மீண்டும் முன்வைப்பது முட்டாள் தனமானது.

அண்மையில் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் செம்மணி மனிதப் புதைகுழியை நேரில் பார்வையிட்ட போதும், அதுகுறித்து சுயாதீன தடயவியல் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற முக்கியமான பரிந்துரையை அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடத் தவறிவிட்டார். இது, நீதிக்கான போராட்டத்தில் ஏற்பட்டுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பாரிய பின்வாங்கலாகவே பார்க்கப்படுகிறது.

உள்நாட்டுப் பொறிமுறையை திணிப்பதன் ஆபத்துக்கள் குறித்து அறிக்கையே சில இடங்களில் சுட்டிக்காட்டுகிறது. கடந்தகால மீறல்கள் குறித்து ஆவணப்படுத்தும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாவதாகவும், ஆதாரங்களைத் திரட்டுவதற்கான நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் அறிக்கை குறிப்பிடுகிறது.

இவ்வாறான சூழலில், உள்நாட்டுப் பொறிமுறை மூலம் நீதி கிடைக்குமென எதிர்பார்ப்பது சாத்தியமற்றது. ஐ.நா. உயர்ஸ்தானிகர் அலுவலகம் கடந்த நான்கு வருடங்களில் திரட்டியுள்ள சுமார் 34,000 தரவுகள் மற்றும் ஆதாரங்கள், நீதியை நிலைநாட்டுவதற்கு மிகவும் முக்கியமானவை.

ஆனால், இந்த ஆதாரங்களை உள்நாட்டுப் பொறிமுறைக்கு கையளிப்பது மிகப்பெரிய ஆபத்தை ஏற்படுத்தும். சாட்சியாளர்கள், சான்றுகள் மற்றும் ஆவணங்கள் இலங்கையில் பாதுகாப்பற்ற நிலையில் உள்ள நிலையில், அரசாங்கத்திடம் இந்த ஆதாரங்களை ஒப்படைப்பது அவற்றின் அழிவுக்கும், சாட்சியாளர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதற்கும் வழிவகுக்கும்.

அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் பிரகடனத்தை ஏற்றுக்கொள்வதற்கு வலியுறுத்துவதும், நடைமுறைக்கு ஒவ்வாத ஒரு கோரிக்கையாகவே தெரிகிறது.

பொறுப்புக்கூறலில் இருந்து தப்பிப்பதற்காகவே இலங்கை அரசாங்கம் ரோம் பிரகடனத்தில் கையெழுத்திடவில்லை.

அப்படியிருக்கும் நிலையில், பொறுப்புக்கூறல் என்ற பொறியினுள் சிக்கிக்கொள்வதற்கு தானாக முன்வந்து அரசாங்கம் கையெழுத்திடுமென எதிர்பார்ப்பது அரசியல் யதார்த்தத்திற்கு அப்பாற்பட்டது. இது, ஐ.நா.வின் பரிந்துரைகள் தற்போதைய அரசியல் சூழலை முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதைக் காட்டுகிறது.

புதிய அரசாங்கத்திற்கான ‘வரலாற்று வாய்ப்பு’ என்பது, நீதியை மறுப்பதற்கான மற்றொரு சாக்காகவே அமையக்கூடும்.

பொறுப்புக்கூறலில் அரசாங்கம் காட்டிவரும் பிற்போக்குத்தனம், கடந்தகால வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியமை, மற்றும் உள்நாட்டுப் பொறிமுறையை திணிக்கும் முயற்சி ஆகியவை பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு மேலும் ஏமாற்றத்தையே அளித்துள்ளது.

உண்மையான நீதியும், நிலையான சமாதானமும் அடையப்பட வேண்டுமெனில், அரசாங்கம் தனது தேர்தல் வாக்குறுதிகளை உண்மையாகவும், வெளிப்படையாகவும் நிறைவேற்ற வேண்டும். அதற்கு அரசாங்கம் தற்போது தயாராக இல்லை.

அதேநேரம், ஐ.நா.வும் பாதிக்கப்பட்ட மக்களின் குரலுக்கு செவிசாய்த்து, சர்வதேசப் பொறிமுறையை வலுப்படுத்த வேண்டும்.

இல்லையெனில், இந்த அறிக்கையும், அதன் மூலம் வழங்கப்படும் பரிந்துரைகளும் பாதிக்கப்பட்ட மக்களின் புதைகுழிகளின் மீது கட்டியெழுப்பப்பட்ட கோட்டையாகவே வரலாற்றில் பதிவாகும்.

ஈழநாடு





படம் : இணையம்

# ஈழ மாணவிகளின் குருதியால் எழுதப்பட்ட செஞ்சோலை இனப்படுகொலை!

இன்றுள்ள மாணவர்களுக்கு மிகுந்த சமூகப் பொறுப்பும் இனத் தார்மீகமும் இருக்கிறது. இந்த மண்ணில் மாணவர்கள் மாபெரும் இனப்படுகொலைகளை சந்தித்தார்கள். கனவு பிசுபிசுக்கும் அவர்களின் குருதி இந்த மண்ணில் கறையாகப் படிந்திருக்கின்றது.

இனப்படுகொலைக்கு எதிரான போராட்டக்களத்தில் மாணவர்கள் அணிதிரள்வதற்கு மாணவர்கள்மீதான படுகொலைகள் தூண்டுகோலாக இருந்தன. பாடசாலைகள் மீதும் பள்ளி மாணவர்கள் மீதும் போரை தொடுக்கிற, குண்டுகளை கொட்டுகிற இனக்கொலை அரசின் இருண்ட பக்கங்களில் எங்கள் பெண் குழந்தைகளின் குருதியால் எழுதப்பட்டது செஞ்சோலை வடு.

### இருண்ட யுகத்தின் கொடுநாள்

ஒரே நாளில் ஒரு சில நிமிடங்களில் ஒருவரல்ல, இருவரல்ல 53 மாணவிகளை இனப்படுகொலைக்குப் பலிகொடுத்தது தமிழர் தேசம். சிங்களப் பேரினவாத்தின் இனக்கொலைப் பசிக்கு எங்கள் தேசத்தின் இளம் குருத்துக்களை வாரிக்கொடுத்த அந்த துயரத்தை மறக்க முடியாமல் நெஞ்சம் இன்றும் துடிக்கிறது.

இனப்படுகொலையாலும் போராட்டத்தாலும் இளையவர்களின் குருதி சிந்திய இந்த மண்ணில் பிறக்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும் மண்ணுக்காகவும் அதன் மாண்புக்காகவும் வாழ்கின்ற பொறுப்பு இருக்கின்றது.

ஒகஸ்ட் 14, செஞ்சோலைப் படுகொலையின் நினைநாள். ஈழத் தமிழர்களின் வரலாற்றில் செஞ்சோலை மாணவர் படுகொலை மறக்க முடியாத வடு. 2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 14 ஆம் திகதி. வழக்கமான ஒரு பொழுதாக புலர்ந்தது. நெஞ்சில் கனவுகளை சுமந்த பள்ளி மாணவிகள் முதலுதவிப் பரீட்சையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதுதான் அந்தக் குழந்தைகள் கொன்று வீசப்பட்டனர். அந்த நாளே ஒரு இருண்ட யுகத்தின் நினைவுகள் போலத்தான் இருக்கின்றன. 2006 ஒகஸ்ட் 11 ஆம் திகதி சிங்கள அரசு வடக்கிற்கான பாதையை மூடி வடக்கை தனியொரு நாடாக துண்டித்து வலிந்த போரைத் தொடங்கியது.

### பாடசாலைகள்மீது குண்டு வீச்சு

யாழ்ப்பாண மக்கள் பசியிலும் இருட்டிலும் துடித்த நாட்கள். சமாதான ஒப்பந்தம் நடைமுறையிலிருந்த காலம் ஏற்கனவே அவ்வப்போது, விடுதலைப் புலிகளின் நிலைகளை தாக்குவதாக சொல்லிக் கொண்டு வடக்கிலும் கிழக்கிலும் விமானதாக்குதல்களை சிங்கள அரசின் விமானப்படைகள் மேற்கொண்டு வந்தன. போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த போதும், விமானத்தாக்குதல்கள் பாடசாலைகளை அண்டியும் வீடுகள்மீதும் நடந்தன.

எல்லாம் புலிகளின் முகாம்கள் என்றே அரசால் கூறப்பட்டது. இதனை வெறுமே பதிவு செய்து கொண்டிருந்தது போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு. தாம் இத்தகைய தாக்குதல்களை நடத்தினாலும் சர்வதேசத்தினாலும், போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவினாலும் எதுவும் செய்ய முடியாது என்ற தைரியம் சிங்கள அரசுக்கு ஏற்பட்டது.

### இவர்களா பயங்கரவாதிகள்?

இதனால் ஒன்றல்ல இரண்டல்ல, 53 மாணவிகளை கொன்று கின்னஸ் சாதனை பதிக்கும் முயற்சியில் சிங்கள அரசு ஈடுபட்டு வெற்றி பெற்றது. உலகிலேயே ஒரே தடைவையில் அதிக பெண்கள் கொல்லப்பட்ட கொடூரச் செயல் செஞ்சோலைப் படுகொலையாகும். உலகிலேயே அதிக மாணவிகள் கொல்லப்பட்ட கொடூரச் செயல் செஞ்சோலைப் படுகொலையாகும். உலகிலேயே அதிக சிறுவர்கள் கொல்லப்பட்ட மனித விரோதச் செயல் செஞ்சோலைப் படுகொலையாகும்.



தீபச்செல்வன்

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு, வலயக் கல்வி அலுவலம் ஊடாக உரிய அனுமதி பெறப்பட்டு, தலைமைத்துவ அனர்த்த முகாமைத்துவப் பயிற்சி நடாத்தப்பட்டது. இப் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பள்ளி மாணவர்கள்மீதுதான் சிங்கள அரசின் இன அழிப்பு விமானங்கள் தாக்குதல்களை நடாத்தினர். இதில் சுமார் 50 மாணவிகள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர் அத்துடன் சில மாணவிகள் வவுனியா வைத்தியசாலைக்கும் கண்டி வைத்தியசாலைக்கும் கொண்டு செல்லப்பட்டார்கள். கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவியை அச்சுறுத்தி, அவரிடம் பொய்யான வாக்குமூலங்களை பெற்றது சிங்கள அரச ஊடகம்.

### காயப்பட்டவர்களைச் சந்தித்தேன

இறுதியில் அந்த மாணவியையும் அங்கு வைத்து கொன்றது. இந்த தாக்குதல் குறித்து அப்போதைய ஜனாதிபதி, தமிழ் இனப்படுகொலை மகிந்த ராஜபக்ச அன்றே வெளிநாட்டில் இருந்து என்ன கூறினார் தெரியுமா ? செஞ்சோலையில் ஐம்பதிற்கும் மேற்பட்ட மாணவிகள் கொல்லப்பட்டுள்ளனர். இது குறித்து என்ன சொல்கிறீர்கள் என்று ஒரு சர்வதேச ஊடகவியலாளர் மகிந்த ராஜபக்சவிடம் கேட்டார். அதற்குப் பதில் அளித்த மகிந்த ராஜபக்ச, அவர்கள் புலிகள், அவர்கள் பயங்கரவாதிகள், அத் தாக்குதல் எனக்கு நூறு வீத திருப்தியை தருகின்றது.

நாங்கள் பயங்கரவாதிகளைத்தான் அழித்து வருகிறோம் என்று கூறினார். அந்தப் பிஞ்சு முகங்களை பார்த்து, மாணவிகளைப் பார்த்து மகிந்த ராஜபக்ச கூறினார் பயங்கரவாதிகள் என்று, புலிகள் என்று. போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு மற்றும் ஐ.நா அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்தனர்.

அவர்கள் பாடசாலை மாணவர்கள் என்றும் தலைமைத்துவ பயிற்சிக்காக ஒன்றிணைந்த போது அரச விமானங்கள் தாக்கி கொல்லப்பட்டனர் என்பதையும் பதிவு செய்தார்கள். இப்படுகொலை நடைபெற்று, ஓராண்டு.

### வாய்மூடி இருந்த சர்வதேசம்

தமிழீழத் தேசியத் தொலைக்காட்சிக்காக ஒரு ஆவணப்படத்தை தயாரிப்பதற்காக அந்த மாணவிகளின் வீடுகளுக்குச் சென்றேன். அவர்களின் பெற்றோர்கள் உறவினர்கள், நண்பர்களை சந்தித்தேன். பாடசாலை அதிபர்களிலிருந்து ஆசிரியர்களிலிருந்து காயப்பட்ட மாணவர்கள்வரை அந்த அதிர்ச்சியில் இருந்து மீள முடியாதிருந்தனர். காலில் பெரும் காயத்தை அடைந்த மாணவி ஒருவர் பேசமுடியால் அழுத காட்சி இப்போதும் பெருவலி தருகின்றது. அவரும் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டார். அப்படுகொலை குறித்த ஆவணப்படத்தில் வாக்குமூலம் அளித்த மூன்று மாணவிகள் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டார்கள்.

53 மாணவிகளும் நன்றாக படிக்கக்கூடியவர்கள். சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருக்க கூடியவர்கள். இன்றிருந்தால், வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, ஆசிரியர்களாக, தலைவர்களாக நம் சமூகத்திற்கு தொண்டாற்றியிருப்பார்கள். இந்த சமூகத்தை நடத்தியிருப்பார்கள். அவர்களை அழிப்பதும் இல்லாமல் செய்வதும்தான் சிங்கள அரசின் வேலை என்பதைதான் இப்படுகொலையும் உணர்த்துகின்றது.

### நீதிக்காக ஏங்கும் ஈழ நிலம்

கல்வி உரிமைக்காகப் போராடினோம். வேலை வாய்ப்புக்காக போராடினோம். ஆனால் சிங்கள அரசோ எமது மாணவர்களை பள்ளிக்கூடங்களில் வைத்தே படுகொலை செய்தது.

சந்திரிக்கா அரசு நாகர் கோவில் பாடசாலையில் விமானத்தாக்குதல் நடத்தியதில் 39 மாணவச் சிறுவர்கள் கொல்லப்பட்டார்கள். மகிந்த அரசு சமாதான ஒப்பந்தத்தை நடைமுறையில் வைத்துக் கொண்டு 53 மாணவிகளைப் படுகொலை செய்தது.

இது குறித்து சர்வதேச சமூகம் எந்த கண்டனங்களையும் விடுக்கவில்லை. அப்படியிருந்தால் கொத்துக் கொத்தாக மாணவர்களையும் மக்களையும் முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யும் துணிவு சிங்கள அரசுக்கு வருமல்லவா? இன்றைய இளைய தலைமுறை இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் இந்தப் படுகொலைக்கான நீதிக்காக ஏங்குகிறார்கள். அது அவர்களின் எதிர்காலத்திற்கான பாதுகாப்பு குறித்ததும் ஆகும்.

இவைகளுக்கான நீதி முன்வைக்கப்படுகிற நாளித்தான் இப்படுகொலையின் வடுக்கள் மறையக்கூடும். நினைவு கூர்தல் என்ற போராட்டத்தின் வழியாக செஞ்சோலைப் பிள்ளைகளுக்கு நீதியை அஞ்சலியாக்குவோம்.

நமது ஈழநாடு
www.namathueelanadu.com
குரல் 06 மலர் 62 ஆகஸ்ட் 2025 மின்னஞ்சல் contact@namathueelanadu.com

# புதிய அரசியலமைப்பு: இரகசிய நகர்வும் தமிழ் தலைமைத்துவத்தின் கடமையும்

சிறிலங்கா அரசாங்கம் புதிய அரசியலமைப்புக்கான பணிகளை அமைதியாகவும், வெளிப்படைத்தன்மையின்றியும் முன்னெடுத்து வருகிறது. இது மக்களின் நம்பிக்கைக்கு அப்பாற்பட்டதொரு செயலாகும்.

நாட்டின் எதிர்காலத்தையும், பல்வேறு சமூகங்களின் உரிமைகளையும் தீர்மானிக்கும் ஒரு ஆவணம், மக்கள் கருத்தறியாமல் இரகசியமாகத் தயாரிக்கப்படுவது ஜனநாயகத்திற்கு முரணானது.

இச்சூழ்நிலையில், தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைமைத்துவம் வெறும் விமர்சனங்களுடன் நின்றுவிடாமல், மிகவும் சுறுசுறுப்பாகவும், மூலோபாய ரீதியாகவும் செயற்பட வேண்டும்.

கடந்த காலங்களில், அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பான பேச்சுக்கள் தமிழ் மக்களிடையே பலத்த எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தின. ஆனால், அவை இறுதியான வெற்றியை எட்டவில்லை.

இதற்கு முக்கிய காரணம், தமிழ் அரசியல் கட்சிகள் ஒரு பொதுவான வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்றுபடத் தவறியது தான். இந்த அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்டு, இப்போது தமிழ் கட்சிகள் ஒருமித்த குரலில் அரசாங்கத்தை அணுக வேண்டும். தனித்தனியாக நடத்தப்படும் சந்திப்புகள் தமிழ் மக்களின் கோரிக்கைகளை வலுவிழக்கச் செய்யும்.

அரசாங்கம் இரகசியமாகச் செயற்படும்போது, தமிழ் கட்சிகள் மக்களுடனும், சர்வதேச சமூகத்துடனும் வெளிப்படைத்தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். பேச்சுவார்த்தைகளின் ஒவ்வொரு கட்டத்திலும் என்ன நடந்தது, எத்தகைய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன, மற்றும் என்னென்ன சமரசங்கள் செய்யப்படுகின்றன என்பதை தமிழ் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். இது, மக்கள் மத்தியில் தலைமைகளின் மீதான நம்பிக்கையை உறுதிப்படுத்துவதோடு, தமிழ் அரசியல் போராட்டத்தின் வலிமையையும் அதிகரிக்கும்.

மேலும், தமிழ் அரசியல் தலைமைத்துவம் ஒரு மாற்று அரசியலமைப்பு முன்மொழிவு அல்லது குறைந்தபட்சம் தமிழ் மக்களின் கோரிக்கைகளை உள்ளடக்கியதொரு விரிவான ஆவணத்தை உருவாக்க வேண்டும்.

இந்த ஆவணமானது, சுயநிர்ணயம், அதிகாரப் பகிர்வு, நில உரிமை, மற்றும் நீதி போன்ற விடயங்களை உள்ளடக்கி, அனைத்துலக நியமங்களுக்கும் இணங்கியதாக இருக்க வேண்டும். இத்தகைய ஒரு ஆவணத்தை உருவாக்கி, அதனை உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டத்தில் பிரபலப்படுத்துவதன் மூலம், அரசாங்கத்தின் இரகசிய நகர்வுகளுக்கு ஒரு வலுவான அரசியல் சவாலை உருவாக்க முடியும்.

சுருக்கமாக, புதிய அரசியலமைப்பு குறித்த இரகசிய நகர்வுகளை அரசாங்கம் முன்னெடுக்கும்போது, தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபட்ட, வெளிப்படையான, மற்றும் மூலோபாய ரீதியான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும். இதுவே, தமிழ் மக்களின் உரிமைகளையும், அபிலாஷைகளையும் பாதுகாக்கும் ஒரே வழியாகும்.


படங்கள் : இணையம்

# செம்மணியில் இதுவரையில் 209 எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன

செம்மணி மனித புதைகுழியில் ஆகஸ்ட் மாத இறுதி வரை மொத்தமாக 209 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மமணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப்பணிகளுக்காக நீதிமன்றம் 45 நாட்கள் அனுமதி வழங்கியுள்ள நிலையில் ஆகஸ்ட் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 39 ஆவது நாள் அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டது.

அந்தவகையில் 39 ஆவது நாள் (ஆகஸ்ட் 31) மதியம் வரையில் புதிதாக 10 எலும்புக்கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கடடம் கட்டமாக இதுவரையில் 48 நாட்களாக முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப்பணிகளின் போது 191 எலும் கூட்டு தொகுதிகள் முற்றாக ஆகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.





## மறைந்த காட்டுனிஸ்ட் அஸ்வினின் தீர்க்கதரிசன கருத்தோவிய தொகுப்புகளிலிருந்து






# செம்மணியில் புதைந்த அவலங்களும் நீதிக்கான சர்வதேச கடப்பாடுகளும்

தாயகன்

செம்மணி சித்துபாத்தியில் கண்டறியப்பட்டுள்ள மனிதப் புதைகுழி, இலங்கையின் உள்நாட்டுப் போரின் போது நடந்தேறிய மிகக்கொடூரமான மனித உரிமை மீறல்களின் சான்றாதாரமாக உள்ளது. இதுவொரு படையினரின் தனிப்பட்ட குரோத்தில் நடைபெற்ற படுகொலைகள் அல்ல, மாறாக, நன்கு திட்டமிட்டு தமிழினத்துக்கு எதிராக அரங்கேற்றப்பட்ட இன அழிப்பின் சான்றாகம்.

அதுமட்டுமன்றி, ஆட்சியில் இருந்த அரச படைகளின் மிலேச்சத்தனமான வன்முறைக்கு ஆழமான சாட்சியாகவும் உள்ளது. சமீபத்திய அகழ்வாராய்ச்சிகளும், முக்கிய சாட்சியங்களின் வாக்குமூலங்களும், இந்த அவலத்தின் கோரத்தையும் நீதியை நிலைநாட்டுவதில் உள்ள சவால்களையும் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. இந்த வரலாற்று வடுவுக்கு நீதி கிடைக்க, சர்வதேச மேற்பார்வை, தொழில்நுட்ப உதவி மற்றும் அரசியல் உறுதிப்பாடு ஆகியவை மிகவும் அவசியமாகின்றன.

கட்டுமானப்பணிகளின் போது எலும்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்றத்தினால் அடையாளம் காணப்பட்ட ‘தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல – 01’ மற்றும் ‘தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல – 02’ ஆகிய இரண்டு அகழ்வாராய்ச்சிக் களங்களில், இதுவரை 147எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதில் ஒரு குழந்தையின் எலும்புக்கூடு மீட்கப்பட்டுள்ளதோடு நீல நிறப் பள்ளிப் பை, பால் சூப்பி போன்றன சான்றுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை குறித்த படுகொலைகளின் கோர முகத்தை உலகிற்கு உணர்த்துகிறது.

குழந்தைகளைக் கூடக்கொடூரமாகக் கொன்றழிக்கும் சிங்களப் படைகளின் குரூரமான மனநிலையின் ஆழத்தை இப்புதைகுழி எடுத்துக்காட்டுகிறது. இந்த அகழ்வுகளில் மீட்கப்படும் எலும்புக்கூட்டுத்தொகுதிகள் வெறும் இறவர்களின் எண்ணிக்கை வெளிப்படுத்தல்ல, மாறாக, நீண்டகாலமாகப் புதைக்கப்பட்டிருந்த உண்மைகளையும், தமிழினத்தின் மீதூன கட்டவிழ்க்கப்பட்ட இனப்படுகொலையையும் வெளிக்கொண்டு வருகின்றன.

1996இல் கிருசாந்தி குமாரசுவாமி படுகொலை செய்யப்பட்ட வழக்கு, செம்மணியின் அவலங்களுக்கானதொரு நுழைவாயிலாக அமைந்தது. தனது இறுதிப் பரீட்சை முடிந்து வீடு திரும்பும் வழியில் இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டு, பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு, பின்னர் படுகொலை செய்யப்பட்டார் கிருசாந்தி.

அவரைத் தேடிச் சென்ற அவரது தாய், சகோதரர், மற்றும் அண்டை வீட்டாரும் அதே இடத்தில் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்டனர். இந்த வழக்கின் முக்கியக் குற்றவாளியான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, 1998 இல் கொழும்பு நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலம், 300 முதல் 400 உடல்கள் செம்மணியில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற அதிர்ச்சி தரும் தகவலை வெளியிட்டது.

சோமரத்ன ராஜபக்ஷவின் வாக்குமூலம், 1999 இல் அகழ்வாராய்ச்சிகளைத் தொடங்க வழிவகுத்தது. ஆனால், அவரது கூற்றுக்கு மாறாக வெறும் 15உடல்கள் மட்டுமே மீட்கப்பட்டன.

அம்னஸ்டி இன்டர்நேஷனல் வெளியிட்ட அறிக்கையின்படி, ராஜபக்ஷ தனது வாக்குமூலத்தை வாபஸ் பெறுவதற்காக அச்சுறுத்தப்பட்டார். அவரது குடும்பத்தினர் கொலை செய்யப்படப் போவதாக மிரட்டப்பட்டனர். இந்த நேரடி அச்சுறுத்தல்களே, மேலும் பல உடல்கள் கண்டுபிடிக்கப்படாததற்கும், விசாரணைகள் திட்டமிட்டுத் தடுக்கப்பட்டதற்கும் அடிப்படையில் காரணமாகியது.

அதன்பின்னர் அகழ்வுகளுக்கு அப்போதைய சந்திரிகா அரசு இடமளிக்கவில்லை. எனினும் குறித்த 15 உடல்களும் அரச படைகளுக்கு இந்தப் படுகொலைகளில் நேரடித் தொடர்பு உண்டு என்பதை வலுவாக வெளிப்படுத்தியிருந்தது.

இவ்வாறான நிலையில் சோமரத்ன ராஜபக்ஷ, அண்மையில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு எழுதிய கடிதத்தில், சர்வதேச விசாரணை நடந்தால் சாட்சியமளிக்கத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். அவர் 29 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சாட்சியமளிக்கத் தயாராக இருப்பது, அவரது பாதுகாப்புக் குறித்த அச்சத்தையும் எழுப்புகிறது.

அவர் புலனாய்வு அதிகாரிகளின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளதால், அவரது குரலை சிறைக்குள்ளேயே நசுக்குவதற்கு முயற்சிகள் நடக்கலாம் என்ற சந்தேகம் இயல்பானது. எனவே, உண்மையை வெளிக்கொணர சோமரத்ன ராஜபக்ஷவை ஒரு சாட்சியாகக் கருதிப்பாதுகாக்க வேண்டியது மிகவும் முக்கியமானது.

அவரது புதிய வாக்குமூலத்தில், 1996களில் யாழ்ப்பாணத்தில் இருந்த முகாம்களில் சித்திரவதைக் கூடங்கள் நடத்தப்பட்டதாகவும், உயிரிழந்தவர்களின் சடலங்கள் மணியம் தோட்டம் போன்ற இடங்களில் புதைக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். இது செம்மணிக்கு அப்பால் இந்த அவலங்கள் பரந்திருந்தன என்பதை உறுதிப்படுத்துகிறது.

செம்மணிப் படுகொலைகள், நீதியை நிலைநாட்டுவதில் உள்நாட்டு அரசாங்கத்தின் கட்டமைப்புகளுக்கு இருக்கும் அரசியல் விருப்பமின்மையையும், பொறுப்புக்கூறலின்மையும் தொடர்ந்து பிரச்சினையாக இருப்பதையும் அம்பலப்படுத்துகிறது.

இலங்கையில் தடயவியல் மற்றும் மரபணு பரிசோதனை வசதிகள் முறையாக இல்லை. சிதைந்த மனித எச்சங்களைப் பகுப்பாய்வு செய்யத் தேவையான ஆய்வகங்கள் இங்கு போதுமானதாக இல்லை.

இதனால், இத்தகைய பாரிய மனிதப் புதைகுழிகளை முறையான தடயவியல் தரங்களுடன் அகழ்வு செய்வது ஒரு பெரிய சவாலாக உள்ளது. இதற்கான மாற்றுவழிகள் குறித்து எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டதாக இதுவரையில் தெரியவில்லை.

செர்பிரெனிகா மற்றும் ருவாண்டா போன்ற நாடுகளில் நடந்த படுகொலைகளின் விசாரணைகள், சர்வதேச நிபுணர்களின் பங்கு எவ்வாறு நீதியைப் பெற்றுத்தர உதவியது என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

சர்வதேச மருத்துவர் குழுக்கள், தடயவியல் நிபுணர்கள் மற்றும் தொல்பொருள் ஆய்வாளர்கள் இணைந்து நடத்திய விசாரணைகள், படுகொலைகள் திட்டமிட்டு நடந்தன என்பதை நிரூபித்தன.

இந்த உதாரணங்கள், நீதியை நிலைநாட்டுவதில் உள்நாட்டு அமைப்புகளின் பலவீனத்தைக் காட்டாமல், சர்வதேச ஈடுபாட்டின் அவசியத்தை உறுதிப்படுத்துகின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்க்கர் டேர்க் செம்மணியைப் பார்வையிட்டது, சர்வதேசத்தின் பார்வை இந்த விவகாரத்தின் மீது விழுந்துள்ளது என்பதை வெளிப்படுத்தியது. இருப்பினும் அண்மையில் வெளிவந்த அவரது தலைமையிலான அலுவலகத்தின் அறிக்கை விடயத்தினை உள்வாங்காது காலைவாரிவிட்டது.

இவ்வாறான நிலையில் செம்மணி மனிதப் புதைகுழிகள், தமிழ் சமூகத்தின் கூட்டு மனக் குமுறலின் வலுவான அடையாளமாக மாறிவிட்டது. இதுவொரு வெறுமனே படுகொலைகள் நிகழ்ந்த மனிதப்புதைகுழி அல்ல, மாறாக திட்டமிட்ட இன அழிப்பக்கான ஆதாரம்.

ஆகவே, பாதிக்கப்பட்டவர்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரசியல் தலைவர்கள் தங்களுக்குள் இருக்கும் தனிப்பட்ட போட்டிகளையும், முரண்பாடுகளையும் கடந்து ஒன்றுபட வேண்டும். இது ஒரு பல்பங்குதாரர் விவகாரம்.

செம்மணிக்கு நீதி கிடைக்க, பின்வரும் நடவடிக்கைகள் அவசியமாகின்றன.

- தொழில்நுட்ப உதவியைப் பெறவும், சோமரத்ன ராஜபக்ஷ போன்ற சாட்சிகளைப் பாதுகாக்கவும், சர்வதேச ராஜதந்திர மட்டத்தில் அழுத்தம் கொடுப்பது அவசியமாகிறது.
- பேதங்களுக்கு அப்பால் அனைவரும் இணைந்து, அகழ்வுப் பணிகளுக்கு தொழில்நுட்ப உதவிகள் மற்றும் சர்வதேச ஈடுபாட்டைப் பெறுவதற்கான ஒரு கூட்டுத் திட்டத்தை உருவாக்க வேண்டும்.
- நீதியை நிலைநாட்டுவது என்பது குற்றவாளிகளுக்கு தண்டனை கொடுப்பதோடு மட்டும் முடிவதில்லை. அது பாதிக்கப்பட்டவர்களின் கண்ணியத்தை மீட்டெடுப்பது, எதிர்காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகள் நடக்காது என்பதை உறுதி செய்வது ஆகிய நிலைமாறுகால நீதியின் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

செம்மணிக்கு நீதி கிடைப்பது, இலங்கை உள்நாட்டுப் போரின் போது வலிந்து காணாமலாக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கானோருக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையின் தொடக்கமாக அமையும். இந்த விடயத்துக்கான நீதியை நோக்கிய பயணம் தமிழ் மக்களின் வாழ்வுரிமை, பாதுகாப்பு மற்றும் எதிர்காலத்திற்கான ஒரு போராட்டத்தின் உச்சமாக இருக்கும்.

இந்த போராட்டம் சர்வதேச ஆதரவுடனும், உள்நாட்டு அரசியல் உறுதிப்பாட்டுடனும் மட்டுமே வெற்றிபெறும். அதற்கான அர்ப்பணிப்பு ஒட்டுமொத்த தமிழினத்துக்குமே தேவையானது.

# அநுர அரசின் அடுத்த வியூகம்

தேசிகன்

அநுரகுமார தலைமையிலான புதிய அரசாங்கம் அரசியலமைப்புச் சீர்திருத்தப் பணிகளை இரகசியமாக முன்னெடுத்து வருகின்ற சூழலில், இது நாட்டின் எதிர்காலம் குறித்த பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

நீதி அமைச்சர் ஹர்ஷ நாணயக்காரவின் கூற்றுகள், புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான அரசாங்கத்தின் நோக்கம் 'மக்களின் அபிலாஷைகளை' நிறைவேற்றுவது தான் என்று குறிப்பிட்டாலும், நடைமுறையில் காணப்படுகின்ற வெளிப்படைத்தன்மை இன்மை, அவருடைய கருத்துக்கள் மீதான நம்பகத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.



படம் : இணையம்

அதுமட்டுமன்றி அநுர அரசு எதிர்க்கட்சிகளின் பாராளுமன்றத் தெரிவுக்குழு கோரிக்கையை நிராகரித்திருப்பதானது, அரசாங்கம் தனது அரசியல் நிகழ்ச்சி நிரலை இரகசியமாக நடைமுறைப்படுத்த முயல்கிறது என்ற சந்தேகத்தை வெகுவாகவே வலுப்படுத்துகிறது.

இந்தச் சூழலில், அரசியலமைப்பு உருவாக்கத்தில் பின்பற்றப்பட வேண்டிய வெளிப்படைத்தன்மை, ஜனநாயகப் பண்புகள், மற்றும் சிறுபான்மை மக்களின் உரிமைகளை ஆகியவற்றை அரசாங்கம் கவனத்தில் கொள்ளுமா என்ற அச்சமான நிலைமையும் காணப்படுகின்றது.

அரசியலமைப்பு என்பது நாட்டின் அனைத்து சமூகங்களின் கூட்டு ஒப்பந்தமாகும். அது ஒருசிலரின் விருப்பங்களையோ, பெரும்பான்மை சமூகத்தின் அபிலாஷைகளையோ மட்டும் பிரதிபலிக்கக் கூடாது. ஒரு அரசியலமைப்பு வலுவானதாகவும், நீடித்ததாகவும் இருக்க வேண்டுமெனில், அதன் உருவாக்கப் பணிகள் வெளிப்படைத்தன்மையுடனும், பன்மைத்துவ பங்களிப்புடனும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

உலக நாடுகள் பலவும் இந்த ஜனநாயகப் பண்புகளைப் பின்பற்றியுள்ளன. தென்னாப்பிரிக்கா இனவெறி ஆட்சியில் இருந்து மீண்டெழுந்தபோது, புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு ஒரு பரந்த ஜனநாயக செயல்முறையைப் பின்பற்றியது.

பாராளுமன்றத்திற்கு அப்பால், அரசியலமைப்பு சபை ஒன்று நிறுவப்பட்டு, அது பல்வேறு அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்களை உள்ளடக்கியிருந்தது. நாடு முழுவதும் பொது விவாதங்கள், கலந்துரையாடல்கள், மற்றும் கருத்துக் கணிப்புகள் நடத்தப்பட்டன. இதன்மூலம், அரசியலமைப்பின் ஒவ்வொரு பிரிவும் பொதுமக்கள் மத்தியில் விவாதிக்கப்பட்டு, ஒருமித்த கருத்தின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அந்தப் புதிய அரசியலமைப்பு அனைத்து சமூகத்தினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, நீதியான மற்றும் நிலைத்தன்மையுள்ள ஒரு ஆவணமாக உருவெடுக்க வழிவகுத்தது. இந்த வெளிப்படைத்தன்மை, மக்களுக்கு அரசியலமைப்பின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தியதுடன், அதன் மீதான உரிமையுணர்வையும் அதிகரித்தது.

ஆனால் அநுர அரசாங்கம் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின் ஆரம்பத்திலேயே இத்தகைய விடயங்களை கடைப்பிப்பதற்கு தயாராக இல்லை. ஆகக்குறைந்தது குறித்த அரசியலமைப்பு பணிகள் எங்கு நடைபெறுகின்றன என்பது கூட இன்னமும் வெளிப்படுத்தப்படாத சூழல் காணப்படுகின்றது.

ஆனால் பிரதமர் ஹரிணியும், அமைச்சர் நாணயக்காரவும் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாக கூறுகின்றார்கள். சட்டவாக்கச் செயற்பாட்டில் பாராளுமன்றமே பிரதானமானது.

ஆனால் பாராளுமன்றத்திற்கு கூட இன்னமும் தெரியாமல் புதிய அரசியலமைப்புச் செயற்பாடுகள் எங்கு ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்பது தான் இங்கு ஏற்பட்டுள்ள மிகப்பெருங்கேள்வியாகும்.

ஆளும் தரப்பின் எந்தவொரு பிரதிநிதியும் இந்தக் கேள்விக்கு பதிலளிப்பதற்கு தயாராக இல்லை. ஆனால் தமது அரசியலமைப்பு சம உரிமைகளை நிலைநாட்டும் என்று உறுதியாகக் கூறுகின்றார்கள். இந்தக் கூற்றை எவ்வாறு நம்புவது.

இலங்கையைப் பொறுத்தவரை, புதிய அரசியலமைப்பு உருவாக்கம்என்பது கடந்த பல தசாப்தங்களாகவே தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் மற்றும் அபிலாஷைகளுடன் பின்னிப்பிணைந்துள்ளது.

தமிழ் மக்கள், தமது மொழி, கலாசாரம் மற்றும் தனித்துவமான தேசிய அடையாளம் ஆகியவற்றைப் பாதுகாத்துக்கொள்வதற்காக சமஷ்டி முறைமையின் கீழ் ஒரு அரசியல் தீர்வைக் கோரி வருகின்றனர்.

ஆனால், இந்த கோரிக்கை தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்றது. புதிய அரசாங்கம் இரகசியமாக புதிய அரசியலமைப்பு பணிகளை முன்னெடுப்பது, இந்த வரலாற்று ரீதியான கோரிக்கைகளை மீண்டும் புறக்கணிப்பதற்கான ஒரு முயற்சியாகவே பார்க்கப்படுகிறது.

அதுமட்டமன்றி, 1972ஆம் ஆண்டும், 1978ஆம் ஆண்டும் புதிய அரசியலமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டபோது தமிழ் மக்கள் முழுமையாக புறக்கணிக்கப்பட்டார்கள். அவ்வாறு முழுமையாக புறக்கணிக்கப்பட்ட ஒரு தேசிய இனக்குழுமத்தை மீண்டும் புறக்கணிப்பதற்கான நடவடிக்கைகள் தான் தற்போது முன்னெடுக்கப்படுகின்றது.

அதேநேரம் புதிய அரசியலமைப்பில் சமஷ்டி முறைமையை ஏற்றுக்கொள்வது, ஒரு நாட்டின் ஒருமைப்பாட்டைக் குலைத்துவிடும் என்ற அச்சம் தென்னிலங்கை சிங்கள, பௌத்த தலைவர்கள் சிலரிடம் இருக்கலாம். ஆனால், உலக அளவில் பல வெற்றிகரமான நாடுகள் இந்த முறைமையின் கீழ் செழித்து வளர்ந்துள்ளன.

உதாரணமாக, கனடா ஒரு கூட்டாட்சி நாடாகும். அங்கு கியூபெக் மாகாணத்தில் உள்ள பிரெஞ்சு மொழி பேசும் மக்களுக்குத் தனித்துவமான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இது நாட்டின் ஒருமைப்பாட்டைக் குலைக்கவில்லை.

மாறாக, பல்வேறு சமூகங்களை உள்ளடக்கிய ஒரு பலமான மற்றும் ஒருங்கிணைந்த நாடாக கனடாவை நிலைநிறுத்தியுள்ளது. இதேபோல், சுவிட்சர்லாந்து போன்ற நாடுகள் வெவ்வேறு மொழிகள் பேசும் சமூகங்கள் அமைதியாக இணைந்து வாழ்வதற்கு கூட்டாட்சி முறைமையை வெற்றிகரமாகப் பயன்படுத்தியுள்ளன.

இந்த உதாரணங்கள், சமஷ்டி முறைமை என்பது ஒரு பலவீனமான விடயம் அல்ல, அது பன்மைத்துவ சமூகங்களில் தேசிய ஒருமைப்பாட்டை வலுப்படுத்தும் ஒரு கருவி என்பதைக் காட்டுகிறது.

இவ்வாறான நிலையில், நீதி அமைச்சர் ஹர்ஷ நாணயக்காரவின் கூற்றுக்கள், அரசாங்கத்தின் உள்நோக்கம் குறித்து மேலும் கேள்விகளை எழுப்புகின்றன. 'அரசாங்கத்தின் தேவைகளுக்காகவே கடந்த காலங்களில் அரசியலமைப்பு திருத்தம் செய்யப்பட்டன' என்று அவர் கூறுவது உண்மைதான். ஆனால், புதிய அரசாங்கமும் அதே தவறான வழியிலேயே பயணிக்கிறதா என்ற சந்தேகம் எழுகிறது.

அவர் 'மக்களின் அவசியத்தை கருத்திற்கொண்டே' புதிய அரசியலமைப்பை உருவாக்குவதாகக் கூறினாலும், பாராளுமன்றத் தெரிவுக்குழுவை நிராகரிப்பது, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் பங்களிப்பையே புறக்கணிப்பதாக உள்ளது. இது ஜனநாயகத்தின் அடிப்படை அம்சங்களை மீறுவதாகும்.

புதிய அசியலமைப்பில் இரகசியத்தன்மையை பின்பற்றுவதென்பது என்பது அரசியல் சிதைவின் ஆரம்பப் புள்ளியாகும்.

நீண்டகாலமாக இன மோதல்களையும், அரசியல் ஸ்திரமின்மையையும் அனுபவித்த இலங்கைக்கு, அனைத்து சமூகங்களும் ஒருமித்த கருத்துக்கு வரக்கூடிய ஒரு வெளிப்படையான புதிய அரசியலமைப்புச் செயற்பாடே அவசியமானது.

அத்தகையதொரு செயல்முறையின் மூலமே, புதிய அரசியலமைப்பு மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, உண்மையான தேசிய ஒருமைப்பாட்டிற்கான அடித்தளத்தை இடுவதாக இருக்கும்.

எனவே, அரசாங்கம் தனது அணுகுமுறையை மாற்றி, எதிர்க்கட்சிகளையும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளையும், சிவில் சமூக அமைப்புகளையும் உள்ளடக்கிய வெளிப்படையான, அனைவரையும் இணைக்கும் யாப்புருவாக்கப் பணிகளை முன்னெடுக்க வேண்டும். இதுவே, நாட்டின் எதிர்காலத்திற்கு அவசியமானது.

இந்தப் புரிதல் அநுரகுமார தலைமையிலான அரசாங்கத்துக்கு இல்லையென்று கூறமுடியாது. அப்படியிருக்கையில் இரகசியச் செயற்பாடுகளை அநுரகுமார தலைமையிலான அரசாங்கம் கடந்த கால அரசாங்கங்களைப் போன்று முன்னெடுப்பதானது, அதற்குள்ளும் சிங்கள, பௌத்த தேசியவாதம் கோலோச்சுகின்றது என்ற கருத வேண்டியுள்ளது.

அதுமட்டுமன்றி, தங்களை தொடர்ந்தும் ஆட்சியில் நிலைநிறுத்திக் கொள்வதற்கானகட்சிஅரசியல்,அதிகாரம், வாக்குவங்கி உள்ளிட்ட மூன்றாந்தர அரசியல் சகதிக்குள் விழுந்து விட்டதாகவே எண்ணத்தோன்றுகின்றது.

எது எவ்வாறாக இருந்தாலும், அநுர அரசாங்கத்தின் இந்தச் செயற்பாட்டை கையாள்வதற்கு தமிழ் மக்களின் அரசியல் தலைமைகளிடத்தில் காணப்படுகின்ற வியூகங்கள் என்ன?

அதுபற்றிய உரையாடல்களை உடனடியாக தமிழ்த் தரப்புக்கள் ஆரம்பிக்க வேண்டியது அவசியமாகின்றது, இல்லாது விட்டால் மீண்டும் ஒற்றையாட்சிக்குள்ளேயே சிக்கத் தவிக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

அந்த நிலைமையானது தமிழ்த் தேசிய இனத்தின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கிவிடும்.

# ஊழலுக்காக ரணிலை கைது செய்த அனுர மகிந்த மற்றும் கோட்டாவைக் கைது செய்வாரா?

## கேள்வி எழுப்பும் தமிழ் தேசிய ஆய்வு அமையம்




ஸ்ரீலங்காவின் முன்னாள் அதிபர் ரணில் விக்கிரமசிங்கவை ஊழலுக்காக கைது செய்துள்ள ஸ்ரீலங்காவின் இன்றைய அதிபர் அனுரகுமார திசாநயாக்க, பெருமெடுப்பில் ஊழல்களைச் செய்த முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்ச மற்றும் கோத்தபாய ராஜபக்சவைக் கைது செய்வாரா என்று கேள்வி எழுப்பியுள்ள நமது ஈழநாடு பத்திரிகையின் தமிழ் தேசிய ஆய்வு அமையம், இனப் படுகொலையாளிகளைக் காப்பாற்றுவதில் அனுரகுமார உறுதியாக உள்ளார் என்றும் தெரிவித்துள்ளது.

இது குறித்து தமிழ் தேசிய ஆய்வு அமையம் விடுத்துள்ள விரிவான அறிக்கை வருமாறு:


படம் : இணையம்

### ரணில் கைது?

"ஸ்ரீலங்காவின் முன்னாள் அதிபர் ரணில் விக்கிரமசிங்க அதிரடியாகக் கைது செய்யப்பட்டுள்ளார். அரச நிதியில் தனிப்பட்ட பயணம் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டு ஊழல் குற்றம் புரிந்தார் என்ற குற்றச்சாட்டில் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் 1983 இனக்கலவரம், நூலக எரிப்பு, பட்டலந்த படுகொலை போன்ற குற்றங்களையும் புரிந்துள்ள ரணிலைக் கைது செய்திருப்பதாகவும் அமைச்சர் பிமல் ரத்தினாயக்கா குறிப்பிட்டுள்ளார். கைது செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவின் உடல்நிலை பாதிக்கப்பட்டமையின் காரணமாக அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அத்துடன் ரணிலின் கைது அவரது ஆதரவாளர்களை மாத்திரமின்றி மகிந்த ராஜபக்ச போன்ற இனப்படுகொலையாளர்களின் ஆதரவாளர்களையும் பெரும் பீதிக்குள் தள்ளியுள்ளன.

இந்த நிலையில் ரணிலின் விடுதலையை வலியுறுத்தி தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எதிராக அனைத்துக் கட்சிகளும் ஒன்று திரண்டுள்ளன. கடந்த காலத்தில் வெவ்வேறு முனைகளில் போட்டியிட்ட ராஜபக்சவினரின் மொட்டுக்கட்சி மற்றும் சஜித்தின் மக்கள் சக்தியுடன் அனைத்து சிங்களக் கட்சிகளும் அரசியல்வாதிகளும் ஒன்றுதிரண்டுள்ளனர்.

ஸ்ரீலங்காவில் ஊழல் ஆட்சிகள் தலைவிரித்தாடிய நிலையில் அதில் பங்கெடுத்தவர்கள் அனைவரும் தற்போது ரணிலுக்கு நடந்த நிலை கண்டு பெரும் அச்சம் கொண்டுள்ளனர். இதனால்தான் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டி போட்டு மோதிக்கொண்ட சிங்களக் கட்சிகள் இன்று ரணிலுக்கு எதிராக ஒன்று திரண்டுள்ளனர். அத்துடன் அவர்கள் கடந்த தேர்தலில் ரணிலுக்கு எதிராக நின்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### ரணில் என்ற நரி

ஸ்ரீலங்காவில் முன்னாள் அதிபராகவும் பிரதமராகவும் இருந்த ரணில் என்ற நரி ஈழத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு செய்த துரோகங்களும் ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக வரலாறு முழுவதும் செய்த அழிவுகளும் என்றும் மறக்க முடியாதவை. இலங்கை அரசியல் வரலாற்றில் நரி என்று அழைக்கப்படுகின்ற ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஈழத் தமிழர்களுக்கு எதிராகப் பாரிய அழிவுத் திட்டங்களை முன்னெடுத்தார். அவருக்கு ரணில் பக்கபலமாக இருந்தார். அவரது காலத்தில் 1981 யாழ் நூலக எரிப்பு, ஜூலை இனப்படுகொலை போன்ற தமிழின எதிர்ப்பு அடக்குமுறைகள் நடந்த வேளை இளம் அரசியல்வாதியாக ரணில் இருந்து ஜே.ஆர். அரசில் அங்கம் வகித்துப் பங்களித்தார்.

அத்துடன் ஜே.ஆர். ஜெயவர்த்தன இல்லாத காலத்தில் அவரது இடத்தை ரணில் வகித்தார். சந்திரிக்கா அரசு தீர்வுத் திட்டத்தைக் கொண்டுவந்த வேளை ரணில் அதனைக் கிழித்தெறிந்தார். பின் நாட்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் பலமாக நின்று வெற்றிகளைக் குறித்த நாட்களில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்த வேளையில் அதற்கு இணங்குவதுபோல நடித்து ஆதரவுப் பாசாங்கைக் காட்டி விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து கருணாவைப் பிரிக்க ரணில் துரோக சூழ்ச்சியினைச் செய்தார். சமாதானப் பேச்சுவார்த்தையை படுகுழியாகப் பாவித்து விடுதலைப் புலிகள் இயக்கத்தை பிளவுபடுத்தி பலவீனப்படுத்துவதே ரணில் என்ற நரியின் நோக்கமாகும். இதன் காரணமாகவே 2005 தேர்தலில் ரணில் ஈழத் தமிழ் மக்களால் தோற்கடிக்கப்பட்டார். ரணில் அப்போது ஜனாதிபதி ஆகியிருந்தால் ஈழத் தமிழ் மக்கள் இன்னமும் பெரும் அழிவுகளைக் கண்டிருக்கக் கூடும்.

### மகிந்தவைத் தண்டிப்பார்களா?

இலங்கையை ஆட்சி செய்த அத்தனை ஜனாதிபதிகளும் இனப் படுகொலையாளிகளே. ரணில் விக்கிரமசிங்கவும் ஈழத் தமிழர்களுக்கு எதிராக இனப்படுகொலைக்கு துணைநின்ற குற்றவாளியே. இன்று சுமந்திரன் ரணிலின் விடுதலைக்காகக் குரல் கொடுப்பது ஆச்சரியமானதல்ல.

கடந்த காலத்தில் ரணில் அதிகாரத்தில் இருந்தபோது சுமந்திரன் தரப்பு நிபந்தனையற்ற ஆதரவை ரணிலுக்கு வழங்கியதுடன் சரவதேச மட்டத்தில் ஈழத் தமிழர்களின் இனப்டுகொலைக்கான நீதிக்கான விடயத்தில் கால அவகாசம் பெற்றுக்கொடுத்து மகிந்த ராஜபக்ச மற்றும் கோத்தபாய ராஜபக்ச உள்ளிட்ட இனப்படுகொலையாளிகளை ரணில் காப்பாற்றுவதற்கு சுமந்திரன் துணை நின்றவர் என்பது வரலாறு.

இந்த நிலையில் அனுர அரசு ரணில் புரிந்த இனப்படுகொலைக் குற்றத்திற்காக ரணிலை கைது செய்யவில்லை. அத்துடன் ரணில் அன்று இனப்படுகொலையாளிகளைப் பாதுகாக்கும் வேலையை செய்தமைபோன்றோ இன்றும் அனுர அரசும் அந்த வேலையை செவ்வனே செய்கிறது. இதில் எல்லொரும் ஒரு தரப்பே. எந்த வேறுபாடும் இல்லை. அன்று மகிந்த ராஜபக்சவுடன் அனுரகுமார துணை நின்றார். சந்திரிக்காவுடன் அனுர துணை நின்றார். 2010இல் மகிந்தவை தோற்கடிக்க ரணிலுடன் அனுர சேர்ந்து நின்றார். தமக்குள்ளான அதிகாரத்திற்கான போட்டியினால்தான் இவர்கள் மோதுகின்றனர்.

முடிந்தால் அனுரகுமார மகிந்தவை அவர் செய்த ஊழலுக்காக உள்ளே வைக்க முடியுமா என்று இந்த இடத்தில் கேள்வி எழுப்புகிறோம். கடந்த காலத்தில் மக்களின் பணத்தைக் கொள்ளையடித்த கோத்தபாய ராஜபக்சவை மக்கள் நாட்டை விட்டு அடித்துத் துரத்திய ராஜபக்சக்களை அனுரகுமார அரசு கைது செய்யுமா? என்பதைக் கேட்கிறோம். அது ஒரு போதும் நடவாது.

அவர்கள் இனப்படுகொலையாளிகள் என்பதால் அனுர அவர்களைக் காப்பாற்றுகிறார் என்பதை இந்த இடத்தில் சுட்டிக்காட்டுகிறோம்... ரணிலைக் காட்டிலும் ஊழல் புரிந்த ராஜபக்சக்களை விட்டு வைத்திருப்பதே சிங்களப் பேரிவாத்தின் கோரமுகம்..." என்று மேலும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# யார் எமக்கு நீதியை பெற்றுத்தருவார்

சுகிர்தன்

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் ஈழ தேசம் உட்பட உலகெங்கும் வாழும் தமிழர்களால் இம் மாதம் (ஆகஸ்ட் 30) உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையினால் கடந்த 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30 ஆம் திகதி சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் பிரகடணப்படுத்தப்பட்டது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்க நீதி கோரும் ஒரு நாளாக அதனை அறிவித்தனர்.

ஆனால் இலங்கையில் சுமார் 4 தசாப்தங்களாக காணாமல் ஆக்கப்பட்டோர் அவலம் தொடர்கின்றது. அதிலும் குறிப்பாக கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகம். உறவினர்களின் கண்முன்னே வலிந்து பிடித்துச்செல்லப்பட்டவர்கள் இன்றுவரையில் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு என்ற நடந்தது அவர்கள் உயிரோடு உள்ளார்களா இல்லையா என்ற கேள்விகளுக்கு எந்தவொரு பதிலும் கிடைக்காத நிலையில் இன்றுவரை உறவுகள் வீதிகளில் அவ்களுக்கான நீதி கோரி தொடர்ந்து போராடிக்கொண்டே இருக்கிறார்கள்.

அதில் காணாமல் ஆக்கப்பட்ட தனது பிள்ளையை கணவனை தேடிய உறவுகளும் இறுதியில் எந்தவொரு பதிலையும் பெறாது மரணித்துப்போகும் அதி துயரச்சம்பங்களும் இலங்கையிலேயே நிகழ்கின்றது.

2009 இறுதி யுத்தத்தின் போதும் அதன் பின்னர்; வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை மீட்டுத்தரும் படி அரசிடமும் சர்வதேசத்திடம் ஈழதேசத்தின் வீதிகளில் இருந்து தொடர்ந்தும் கோரிவரும் உறவுகள் இன்னும் வீடு திரும்பாது வீதிகளிலேயே காத்திருக்கின்றனர். இனவெறி கொண்ட ஆட்சியாளர்களிடமிருந்து என்றும் நீதி கிடைக்கப்போவதில்லை என்பதை உணர்ந்து சர்வதேசத்தையே தமது இறுதி நம்பிக்கையாக கொண்டுள்ளனர்.



படம் : இணையம்

ஆனாலும் சர்வதேசமும் அவர்களின் வலிகளை ஏக்கங்களை உணர்வதாக இல்லை. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள எங்கே என்று ஈழதேச வீதிகள் எங்கும் உறவுகள் தொடர்ச்சியாக போராடிக்கொண்டிருக்கும் சம நிலையில் மண்ணுக்குள் இருந்து மனித எலும்புக்கூடுகளும் தொடர்ச்சியாக மீட்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

தற்போது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள செம்மணி மனிதப்பதைகுழிகளில் இதுவரையில 209 எலும்புக்கூட்டுத்தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. அரச படைகளால் மிகக்குரோதமாக ஆண்பெண் சிறிய வயது பெரிய வயது என எந்தவித வேறுபாடுமின்றி கொன்று புதைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை மீட்கப்பட்ட எலும்புக்கூட்டுத் தொகுதிகள் சாட்சியம் வெளிப்படுத்துகின்றன. இதில் ஒரு குழந்தையின் எலும்புக்கூடு மீட்கப்பட்டுள்ளதோடு நீல நிறப் பள்ளிப் பை, பால் சூப்பி போன்றன சான்றுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை குறித்த படுகொலைகளின் கோர முகத்தை உலகிற்கு உணர்த்துகிறது.

இந்நிலையில் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் செம்மணி புதைகுழி அகழ்வு நடவடிக்கைகளை நேரில் பார்வையிட்ட போதும் அது குறித்து சுயாதினமான தடயவியல் விசாரணை நடத்த வேண்டும் என அண்மையில் வெளியிட்ட இலங்கை nhதடர்பிலான அறிக்கையில் குறிப்பிட தவறியுள்ளமை பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு பெரும் ஏமாற்றமே. நேரில் வந்து பார்த்த போதிலும் அது தொடர்பில் அறிக்கையில் அவர் முக்கியத்துவம் செலுத்தவில்லை.

இவ்வாறன நிலையில் நாம் யாரிடம் செல்வோம். ஏமக்கான நீதியை யார் பெற்றுத்தருவார் என்ற பெரும் கேள்விய பாதிக்கப்பட்ட தரப்பினரின் முன்னால் பெரும் சுவராக எழுந்து நின்றிகின்றது.


























சர்வதேச காணாமல் ஆக்கப் பட்டோர் தினம் ஈழதேசம் உட்பட உலக நாடெங்கும் தமிழர்களால் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப் பட்டதுடன் காணாமல் ஆக்கப் பட்ட தமது உறவுகளுக்கான நீதி கோரிய நிகழ்வுகளின் பதிவுகள்












# “பூகோள அரசியலில் புதிய அத்தியாயம் உருவாகிறதா?”

**பூமிகன்**

அமெரிக்க ஜனாதிபதி டொனா ல்ட் ட்ரம்ப் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் ஆகியோருக்கு இடையிலான இரண்டாவது நேருக்கு நேரான சந்திப்பும் தோல்வியில் நிறைவடைந்திருக்கின்றது.

அலாஸ்காவில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இருதரப்புப் பேச்சுவார்த்தைகளில் இணக்கப்பாடுகள் எட்டப்படவில்லை. வெறும் ‘கைலாகுடன்’ காத்திரமான முடிவுகளின்றி அசசந்திப்பு, நிறைவுக்கு வந்தது.

இருவருக்கும் இடையிலான இரு தரப்புச் சந்திப்பு இவ்வாறு முடிவுறுவதொன்றும் புதிய விடயமல்ல. ஏலவே ஒரு தசாப்தத்திற்கும் மேலான அமெரிக்கரஷ்ய உறவுகளின் மோதலைத் தணிக்கும் வரலாற்று வாய்ப்பாக 2018ஆம் ஆண்டு மேற்படி இரு தலைவர்களுக்கு இடையிலான சந்திப்பு கருதப்பட்டது.

2018 ஆம் ஆண்டு ஹெல்சிங்கியில் நடந்த இந்த சந்திப்பு, பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நடைபெற்றது. இருப்பினும், அது இரு நாடுகளுக்கும் இடையே ஆக்கபூர்வமான உரையாடலை உருவாக்கத் தவறியதோடு, ட்ரம்ப் உள்நாட்டில் கடும் விமர்சனங்களை எதிர்கொள்ள வழிவகுத்தது.

இவ்வாறான நிலையில் தான் உலக அமைதிக்கு அச்சுறுத்தலாக விளங்கும் உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வரும் ஒரு முக்கிய முயற்சியாக, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் ஆகியோரின் சந்திப்பு 2025 ஜூலையில் அலாஸ்காவில் நடைபெற்றது.

குறித்த சந்திப்பானது, 2022 இல் உக்ரைன் மீதான ரஷ்யாவின் முழு அளவிலான படையெடுப்புக்குப் பிறகு, புட்டின் மேற்குலக நாடுகளால் ஓரங்கட்டப்பட்டு, சர்வதேச அளவில் தனிமைப்படுத்தப்பட்ட தலைவர் என்ற நிலையை மாற்றியமைத்தது.

புட்டினுக்கு செங்கம்பள வரவேற்பு அளிப்புடன் ஆரம்பித்த இச்சந்திப்பு, உலக அரங்கில் புட்டின் தனது பிம்பத்தை மீட்டெடுப்பதற்கான அரியதொரு வாய்ப்பை வழங்கியது. ஆனால், இச்சந்திப்பின் முடிவில், உக்ரைன் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமல், இரு தலைவர்களும் அடுத்த சந்திப்புக்கான வாயிலைத் திறந்திருப்பது உலக அரசியலில் புதியதொரு அத்தியாயத்துக்கு பிள்ளையார் சுழிபோட்டுள்ளது.

இச்சந்திப்பு, ரஷ்யாவைப் பொறுத்தவரையில் மிகப்பெரிய இராஜதந்திர வெற்றியாகவே கருதப்படுகிறது. ரஷ்ய ஜனாதிபதி புட்டின் உக்ரைன் போர் தொடங்கிய பின்னர், வடகொரியா மற்றும் பெலாரஸ் போன்ற நட்பு நாடுகளைத்தவிர, மற்ற நாடுகளுக்கு அவர் பயணம் செய்யவில்லை.

அலாஸ்காவில், கூட்டுத் தளமான எல்மென்டோர்ஃப்ரிச்சார்ட்ஸனில் அமெரிக்க ட்ரம்ப் செங்கம்பள மரியாதையுடன் புட்டினை வரவேற்றது, மேற்குலக நாடுகளின் அனைத்து எதிர்பார்புகளையும் மிஞ்சிய தொரு நிகழ்வாகும்.

புட்டின் தனது சொந்த காரில் செல்லாமல், ட்ரம்ப்பின் கவச லிமோசினில் ஏறிச்சிரித்துக் கொண்டு சென்ற காட்சி, இரு தலைவர்களுக்கும் இடையே இருந்த தனிப்பட்ட நல்லுறவை வெளிப்படுத்தியது.

வெறுமனே ஆறு மாதங்களுக்குள், மேற்குலகால் ஒதுக்கப்பட்டதொரு தலைவரான புட்டீன் அமெரிக்க மண்ணில் கூட்டாளியாகவும் நண்பராகவும் வரவேற்கப்பட்டமையானது, ரஷ்யாவின் வெளியுறவுக் கொள்கைக்கு கிடைத்தவொரு வெற்றியாகும்.

ரஷ்யாவில் கடந்த 25 ஆண்டுகளாக ஊடக சுதந்திரத்தை ஒடுக்கி, தனது சர்வாதிகார ஆளுகையால் முழுமையான கட்டுப்பாட்டை நிலைநாட்டியுள்ள புட்டின், பெரும்பாலும் எவராலுமே கேள்வி கேட்கப்படாத ஒருவராகவே இருந்து வருகிறார்.

ஆனால், அலாஸ்காவில் தரையிறங்கிய சில நிமிடங்களிலேயே, ஊடகவியலார் ஒருவர் ‘ உக்ரைனில் பொதுமக்களைக் கொல்வதை நிறுத்துவீர்களா?" என்று உரக்கக்கேட்டார். இக்கேள்விக்கு புட்டின் எந்தவித வெளிப்படையான எதிர்வினையையும் காட்டவில்லை.

பின்னர், ஒரு குறுகிய புகைப்பட அமர்வின் போது, மற்றொரு பத்திரிகையாளர் ரஷ்ய மொழியில் ‘ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியுடன் முத்தரப்பு உச்சி மாநாட்டிற்குத் தயாராக இருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

இதற்கும் புட்டின் ஒரு புதிரான புன்சிரிப்பை மட்டுமே பதிலாக வழங்கினார். இந்த கேள்விகள், ஊடக சுதந்திரம் இல்லாத ரஷ்யாவில் புட்டின் சந்திக்காத கேள்விக்கணைகளைச் சந்தித்தவொரு சூழலை வெளிப்படுத்தின.

இதேநேரம், ட்ரம்ப் மற்றும் புட்டின் இரு தலைவர்களும் ஊடகவியலாளர்கள் சந்திப்பை நடத்தாமல், தனிப்பட்ட அறிக்கைகளை மட்டுமே வெளியிட்டனர். முதலில் பேசிய புட்டின், பேச்சுவார்த்தையில் எதிர்பார்ப்புக்கள் நிறைந்த மற்றும் பரஸ்பர மரியாதை கொண்ட சூழலைப்பாராட்டியதோடு, அலாஸ்கா ஒரு காலத்தில் ரஷ்யாவின் பிராந்தியமாக இருந்த வரலாற்றைப் பற்றி பேசினார்.

பல நிமிடங்கள் கழித்தே, உக்ரைன் பற்றிய ‘நிலைமை’ குறித்து அவர் குறிப்பிட்டார். ‘ஒரு உடன்பாடு’ எட்டப்பட்டதாகக் கூறிய புட்டின், ‘மோதலின் மூல காரணங்கள்’ அகற்றப்பட்ட பின்னரே அமைதி அடைய முடியும் என்று கூறினார்.

புட்டினின் இந்த வார்த்தைகள் கீவ் உட்பட பல இடங்களில் ஆபத்து ஒலிகளை வெளிப்படுத்தியுள்ளன. அவர் குறிப்பட்ட மோதலின் மூல காரணங்கள் என்பது ரஷ்யாவின் அசைக்க முடியாத கோரிக்கைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடும் ஒரு சொல்லாடலாகும்.

இதில் கிரிமியா, டொனெட்ஸ்க், லுஹான்ஸ்க், ஜபோரிஜ்யா மற்றும் கெர்சான் ஆகிய உக்ரைன் பிராந்தியங்கள் மீது ரஷ்யாவின் இறையாண்மையை அங்கீகரிப்பது, உக்ரைன் படைகளைத் தளர்த்திக்கொள்வது, வெளிநாட்டு இராணுவ ஈடுபாடற்ற நடுநிலை நாடாக இருப்பது, மற்றும் புதிய தேர்தல்களை நடத்துவது ஆகியவை உள்ளடங்குகின்றன.

இந்த கோரிக்கைகள் உக்ரைன் சரணடைவதற்குச் சமமானவை. மூன்று ஆண்டுகளுக்கும் மேலான மோதலுக்குப் பிறகும், புட்டின் இந்த கோரிக்கைகளில் உறுதியாக இருப்பது தெளிவாகிறது. இதனால், எந்தவொரு அமைதி ஒப்பந்தமும் எட்டப்படவில்லை.

சந்திப்பின் நோக்கம் உக்ரைன் மோதல் குறித்த அமைதிப்பேச்சுவார்த்தையாக இருந்தபோதிலும், ட்ரம்ப் தனது அறிக்கையில் உக்ரைனில் போர்நிறுத்தம் பற்றி ஒரு வார்த்தைகூட குறிப்பிடவில்லை.

அவர், ‘ஒவ்வொரு வாரமும் ஐந்தாயிரம், ஆறாயிரம், ஏழாயிரம் பேர் கொல்லப்படுகிறார்கள்’ என்று குறிப்பிட்டு, புட்டீனும் இரத்தக்களரியை முடிவுக்குக் கொண்டுவர விரும்புவதாகக்கூறினார்.

பொதுவாக அதிகம் பேசும் ட்ரம்ப், புட்டீனை விடக்குறைவாகவே பேசினார். அவரது அறிக்கை வழக்கத்திற்கு மாறாகச் சுருக்கமாகவும், தெளிவின்றியும் இருந்தது. ‘நாம் பல விடயங்களில் உடன்பட்டோம்" என்றும், ‘மிகப் பெரிய முன்னேற்றம்’ எட்டப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

ஆனால் எந்தவொரு குறிப்பிடத்தக்க விவரங்களையும் அவர் வெளியிடவில்லை. அமைதிக்கான எந்தவொரு திட்டங்களையோ, முக்கிய உடன்படிக்கைகளையோ அறிவிக்கவில்லை.

போர்நிறுத்தம் எட்டப்படாவிட்டால் ‘கடுமையான விளைவுகள்’ ஏற்படும் என்று ட்ரம்ப் முன்னைய காலங்களில் மிரட்டியமை பற்றி குறிப்பிடவில்லை. ஆனால் ‘நாம் அங்கு செல்லவில்லை" என்று ட்ரம்ப் ஒப்புக்கொண்டார், ‘ஆனால், அங்கு செல்வதற்கு நமக்கு ஒரு நல்ல வாய்ப்பு இருக்கிறது" என்று நம்பிக்கையுடன் கூறினார். அது நிச்சயமாக அமைதி என்ற இலக்கை அடைவதாகும்.

குறித்த சந்திப்பு உக்ரைனில் அமைதிக்கு உறுதியான முன்னேற்றத்தை வழங்கத் தவறியபோதிலும், அது ரஷ்யாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையேயான உறவுகளை வலுப்படுத்தியுள்ளது. புட்டீனின் விமானத்தின் அருகே அமெரிக்க வீரர்கள் முழங்காலிட்டு சிவப்பு கம்பளத்தை விரிக்கும் படங்கள் சமூக வலைத்தளங்களில் பரவலாகப் பகிரப்பட்டன.

சந்திப்பின் இறுதியில், புட்டின் ஆங்கிலத்தில் ஒரு அரிய வார்த்தையை வெளிப்படுத்தினார். ‘அடுத்த முறை மாஸ்கோவில்’ என்று சிரித்தபடியே ட்ரம்ப்பை நோக்கி அவர் கூறினார். அதற்கு ட்ரம்ப், ‘அது சுவாரஸ்யமானது. எனக்கு சிறிது விமர்சனம் வரும், ஆனால் அது நடக்க வாய்ப்புள்ளது’ என்று பதிலளித்தார்.

எந்த வாக்குறுதிகளையும், சலுகைகளையும் வழங்காத ஒரு கூட்டறிக்கையுடன் புட்டின் மொஸ்கோ நோக்கிப் புறப்பட்டார்.

எனினும் இருதரப்பு தகவல்களின் பிரகாரம் அடுத்த சந்திப்பு மொஸ்கோவில் நடத்துவதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளது. ரஷ்யாவின் இராஜதந்திர வெற்றிக்கு இதுவொரு சான்றாக உள்ளது.

இந்தச் சந்திப்பு, உலக அரசியலில் புதிய திருப்பத்தினை ஏற்படுத்தப்போகின்றதா இல்லை இன்னமும் வல்லரசுக்களுக்கிடையிலான பனிப்போர் தொடரப்போகின்றதா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வெண்டியுள்ளது.




படம் : இணையம்